முதன்னை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர், வேலூர் மாவட்டம்.

சி.பி.எண்.73/2025

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 17–ஆம் தேதியில் திரு. ெஹன்ரி பிரகாஷ் என்பவரது வாக்குமூலம் (1908– ஆம் ஆண்டின் சட்டம் 10–வது கட்டளை மற்றும் தொழில் தகராறு சட்டம் 1947 ஏற்பாட்டின் படி) திருமதி. A.K/நாசினி. Deputy Nazir என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிராமணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 17.06.2026.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | கே.நாகராஜன் |
| 2. | தந்தை பெயர் | : | கண்ணியப்பன் |
| 3. | தொழில் | : | முதுநிலை கண்காணிப்பாளர் |
| 4. | வயது | : | 58 |
| 5. | முகவரி | : | வேலூர் நகர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், வேலூர் மண்டலம் நிறுவாக அலுவலகம். |

## முதல் விசாரணை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான்.

## குறுக்கு விசாரணை

பேருந்தில் வசூலாகும் பணத்திலிருந்து ரூ.100–க்கு ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு ரூ.1.30/– வழங்கப்படும் என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுநருக்கு ரூ.1.30/– மற்றும் நடத்துனருக்கு ரூ.1.30/– வழங்கப்படும். மகளிருக்கு இலவச பயணம் என்று அறிவித்த பின்பு எத்தனை மகளிர் ஏறுகிறார்களோ அதற்கான கட்டணம் ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு

கொடுக்கப்படுவதில்லை என்று சொன்னால் சரியல்ல. 2024–க்கு முன்னர் ஓட்டுநருக்கு ரூ.0.65/–வும் நடத்துனருக்கு ரூ.0.65/–வும் வழங்கப்பட்டது. மகளிர் விடியல் பயணத்திற்கு பின்னர் ஓட்டுநருக்கு ரூ.1.30/– மற்றும் நடத்துனருக்கு ரூ.1.30/– வழங்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள எதிலுரையில் இந்த விவரங்களை நான் தெரிவிக்க வில்லை என்றும் வழக்கிற்காக மாற்றி சாட்சி அளிக்கின்றேன் என்றால் சரயல்ல. மனுதாரர் ஒருமாதத்தில் எத்தனை நாள் பணிபுரிந்தார் என்பதற்கான வருகை பதிவேடு உள்ளது. அன்றாடம் மனுதாரர் கட்டிய பணத்திற்குண்டான Way Bill சம்பள விவரப்பட்டியல் உள்ளது. அந்த Way Bill–ல் ஒரு நாளைக்கு எத்தனை ஆண்கள், சிறு குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்தார்கள் என்ற விவரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் Way Bill–ன் அடிப்படையில் தான் அவருக்கு கிடைக்க வேண்டிய பணித்தொகையை கோரியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. Electronic Bus Ticket Machine–ல் தான் எத்தனை ஆண்கள், சிறு குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்தார்கள் என்ற விவரம் இருக்கும். Way Bill–ல் அந்த விவரங்கள் காணப்படாது. ஒவ்வொரு நாளும் தணிக்கை செய்யும் போது Ticket Machine–ஐ நிறுவாகம் சரிபார்க்கும். ஒரு பெண் பயணிக்கு அரசாங்கம் ரூ.16/–ஐ கணக்கிட்டு எங்கள் நிறுவாகம் இந்த Electronic Bus Ticket Machine–யை வைத்து தான் வழங்குகிறது என்று சொன்னால் சரிதான். இலவச பயணம் என்று காரணம்காட்டி அரசாங்கத்திடமிருந்து ஒரு பெண் பயணிக்கு ரூ.16/– பெற்றுக் கொண்டு ஓட்டுநர் மற்றும் நடத்தனருக்கு ரூ.1.30/–ஐ நாங்கள் கொடுக்க மறுக்கிறோம் என்று சொன்னால் தவறு. ஒரு மாதத்திற்கு எத்தனை பெண் பயணிகள் பயணித்துள்ளார்கள் என்று மனுதாரர்

தெரிவித்துள்ளார் அந்த எண்ணிக்கையை நாங்கள் மறுத்துள்ளோம். அதை நிறுபிப்பதற்கு Electronic Bus Ticket Machine–ஐ ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு ரூ.1.30/– விகிதம் மகளிர் விடியல் பயணத்திற்கு பிறகு ஒவ்வொரு மகளிருக்காக கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.1.30/– கொடுக்கப்பட்ட பின்னர் ரூ.2.60/– ஆக மாற்றப்பட்டுள்ளது அதற்குண்டான ஆவணங்களை என்னால் ஆஜர் படுத்த இயலும். மகளிர் விடியல் பயணத்தில் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய பேட்டாவை கொடுக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI Digitally signed by PACKIAJOTHI Date: 2026.06.17 17:40:54 +0530

Presiding Officer